திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மீஞ்சூரில் தமிழ்நாட்டில் தலைகுனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானம் ஏற்பு பொதுக்கூட்டம் மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் தலைமையில் நடைபெற்றது இதில் அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், ஆவடி சா.மு.நாசர் சிறப்புரையாற்றி தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் உறுதி மொழி ஏற்றனர். இதில் கழக அமைப்பு துணைச் செயலாளர் தாயகம் கவி, டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, சைதை சாதிக், மு.பகலவன், பி.ஜெ.மூர்த்தி, சி.எச். சேகர், வெ.அன்புவாணன், கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஜி.ஸ்டாலின், ஏ.கே.சுரேஷ், ராபர்ட் ராஜதுரை, கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, மு. கதிரவன், எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், கே.எஸ்.மணி, பி.வெங்கடாஜலபதி, பா.செ.குணசேகரன், பரிமளம்விஸ்வநாதன், ஏ.வி.ராம் மூர்த்தி உள்பட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட 8 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய குரூப் 2 தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்ட 12 அலுவலர்களுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பணி ஆணைகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் பிரதாப், மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜெ. கோவிந்தராஜன், திருவள்ளூர் நகராட்சி மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன் உட்பட அரசு துறை அதிகாரிகள் உள்ளனர்.

துரோகத்தின் மொத்த உருவமாகத் திகழ்கிறார் எடப்பாடி!

நன்றி மறக்காத பெண்களுக்காகவே திட்டங்களைத் தீட்டுகிறார் முதல்வர்!

காஞ்சிபுரத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேச்சு!

காஞ்சிபுரம், செப். 24,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் "ஓரணியில் தமிழ்நாடு" தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம் காஞ்சிபுரத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

அமைச்சர் ஆர்.காந்தி, சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ப.அப்துல்மாலிக், மாநகர செயலாளர் சி.கே. வி. தமிழ்ச் செல்வன், மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், மேயர் திருமதி மகாலட்சுமி யுவராஜ், பகுதி செயலாளர் கே.திலகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்த இக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கலந்து கொண்டு பேசியதாவது:

வரலாற்று சிறப்பு மிக்க இந்த காஞ்சி மாநகரத்தில் இந்த பிரமாண்டமான பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்து, இதில் உரையாற்றுகின்ற நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்த மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் அவர்களுக்கும், மாநகரச் செயலாளர் சி.கே.வி. தமிழ்செல்வன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காஞ்சிபுரம் என்று சொன்னாலே திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில் மட்டுமல்ல உலக வரலாற்றில் இடம் பெற்றிருக்கின்ற ஒரு ஊர். இந்த மாநகரம் என்பதை சொல்லிக் கொள்கிறேன். அப்படிபட்ட மாநகரத்தில் எனக்கு முன்னாள் பேசிய கழகத்தின் பேச்சாளர்களும், குறிப்பாக மாநகரத்தின் மேயர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் அருமைத்தம்பி எழிலரசன் அவர்களும், அதனைத் தொடர்ந்து உரையாற்றிய சுந்தர் அவர்களும்., அமைச்சர் காந்தி அவர்களும், இந்த நான்கரை ஆண்டு காலத்தில் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பொறுப்பேற்றப் பிறகு செய்திருக்கின்ற திட்டங்களை எல்லாம் ஒரு சிலவற்றைத்தான் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

ஆனால், கண் இல்லாத கபோதிகள் சில பேர் இந்தத் திட்டங்கள் எல்லாம் மறந்து விட்டு மட்டுமல்ல, பார்ப்பதற்கு மனமில்லாமல் ஏதேதோ பேசி விடுகிறார்கள். அதைத்தான் இங்கே காந்தி அவர்கள் பேசினார். அவர் அமைச்சராக இல்லாமல் இருந்தால் வெளுத்து வாங்கி இருப்பார். அவர் பேசுவதை கிராம பாணியில் மட்டுமல்ல, உங்களுக்குப் புரியக் கூடிய வகையில் மட்டுமல்ல எதார்த்தமான உண்மைகளை பேசக்கூடிய ஆற்றல் மிக்கப் பேச்சாளர் நம்முடைய காந்தி அவர்கள். மனதில் பட்டதை வெளிப்படையாக பேசிவிடுவார்.

எல்லோருக்கும் வெயிற்றெரிச்சல் படுகிறார்கள். பதறுகிறார்கள். மு.க.ஸ்டாலின் என்று பெயரைக் கேட்டாலே டெல்லியில் இருக்கின்ற மோடியில் இருந்து, இங்கே தமிழ்நாட்டில் இருக்கின்ற சிலபேர் கேடிகளாக இருந்து பயப்படுகிறார்கள் என்று சொன்னால் அதற்கு என்ன காரணம் ? இந்த நான்கரை ஆண்டு காலத்தில் நாம் சாதித்திருக்கின்ற சாதனையைப் போல இந்தியாவில் வேறு எந்த அரசியல் கட்சியும் சாதித்தது கிடையாது. இங்கே கூட காந்தி சொன்னார். இந்த ஆட்சியில் பெண்களுக்குத்தான் அதிக திட்டங்களை செய்து கொடுத்திருக்கிறார்கள் என்று. தளபதி மு.க.ஸ்டாலின் வந்ததில் இருந்து எல்லாத் திட்டமும் பெண்களுக்குத்தான் என்று சொன்னார். உண்மைதான். அதோடு நிற்காமல் ஆண்களுக்கு ஏன் கொடுக்க வில்லை என்பதை அவர் பாணியிலே சொன்னார்.

மறக்க முடியாத இரண்டு சம்பவங்கள்!

இதற்கு பின்னால் இருக்கின்ற வரலாற்றை ஒரு கணம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் பல கூட்டங்களில் இதனை சொல்லி வருகிறேன். காரணம் எந்த ஒரு காரியத்தையும் பெண்களுக்குச் செய்ததில் நன்றியுணர்வோடு இருக்கின்ற மனப்பாண்மை பெண்களுக்கு உண்டு என்பதை என்னுடைய அனுபவத்தில், கலைஞர் பக்கத்தில் இருந்து நான் நேரடியாக பல அனுபவங்களை பார்த்திருக்கிறேன். அதில் இரண்டு சம்பவத்தை என்னுடைய வாழ்நாளில் மட்டுமல்ல ஒவ்வொரு தி.மு.க.வினர் வாழ்நாளிலும் மறக்க முடியாத இரண்டு சம்பவங்கள் நடைபெற்றது.

எடப்பாடிக்கு வயிற்றெரிச்சல், இந்தத் திட்டங்கள் எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் மத்தியில், இங்கே காந்தி சுட்டிக் காட்டியதைப் போல, நான் வெளிப்படையாகச் சொல்கிறேன். நான் எம்.ஜி.ஆர். கூட நெருக்கமாக இருந்தவன். எம்.ஜி.ஆர். குண்டடி படுகின்ற வரை கூடவே இருந்து பிரச்சாரம் செய்து, நாங்கள் அவரை வீட்டில் விட்டுட்டு வந்தோம். வீட்டுக்கு போன உடனே ராதா அவர்கள் சுட்டுவிட்டார். என் கூடவே இன்னும் ஒரு மணி நேரம் இருந்திருந்தால் சுட்டு இருக்க மாட்டார். அவசரப்பட்டு போனார். ராதா சுட்டுவிட்டார். அந்த நேரத்தில் எம்.ஜி.ஆர். அவர்கள் எங்கள் தொகுதியில் நின்ற நேரத்தில் தான் சொல்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கென்று ஒரு தனி செல்வாக்கோடு, மக்கள் ஆதரவை நான் பார்த்திருக்கிறேன்.

எம்.ஜி.ஆரோடு ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டவர்கள் நாங்கள்!

எம்.ஜி.ஆர். அவர்களுடன் ஓட்டு கேட்க போனால், அவர் வேனில் உட்கார்ந்து இருப்பார் நான் இல்லாமல் ஓட்டு கேட்க எம்.ஜி.ஆர். போகவே மாட்டார். நான் தான் அவருக்கு; எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றத்தினுடைய செயலாளர், என்னைத்தான் அவர் மிகவும் நேசித்தார். இவை எல்லாம் பத்திரிகை களில் அன்றைக்கு வந்திருக்கிறது. ஆர்.எம்.வீரப்பன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றில், வீரப்பனே அவர்களே எழுதியிருக்கிறார். அதில் என்னுடைய பேட்டியும் பேச்சும் ,பேட்டியும் அந்தக் காலத்தில் நான் பேசியதையெல்லாம் படம் போட்டு காட்டியிருக்கிறார்கள். இதனை ஏன் சொல்கிறேன் என்றால் எம்.ஜி.ஆர். அவர்களோடு ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டவர்கள் நாங்கள், அவருக்கு சமமாக அமர்ந்து பேசின வங்க நாங்கள். அவரைப்படத்தில் பார்த்துட்டு வந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு சவால் விடுகிறார்கள் என்று சொன்னால் எங்களுக்கு கோபம் வருமா, வராதா?

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு பெண்களின் கூட்டம் அதிகம்!

அன்றைக்கு எம்.ஜி.ஆர். அவர்களோடு போகும் போது நாங்கள் பார்ப்போம். திடீரென்று போவோம் ஊருக்குள் எங்கிருந்து தான் வரும் என்று தெரியாது கூட்டம். ஈசல் புத்து மாதிரி பெண்கள் ஓடி வருவார்கள். அப்படி ஒரு காட்சி எம்.ஜி.ஆர்.க்கு இருந்தது. எம்.ஜி.ஆர்.க்குப் பிறகு எந்த அரசியல் கட்சித் தலைவருக்கும் அப்படி ஒரு நிலை இல்லை. இன்றைக்கு அதே நிலை நம்முடைய தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதை பெருமையோடு சொல்வேன்.

அதற்கு என்ன காரணம்? ஒவ்வொரு திட்டத்தையும் பெண்களுக்காக செய்தார். அதற்குப் பின்னால் இருக்கின்ற வரலாறு என்ன வென்றால்; நான் எமர்ஜென்சி நேரத்தில் கலைஞர் ஜீன் மாதம் 2 ஆம் தேதி ஒரு போராட்டத்தை அண்ணா சாலையில், அண்ணா சிலைக்கு முன்பு போராடினார். கலைஞர் ஒரு மணி நேரம் வெயிலில் நின்று கொண்டு "சர்வாதிகாரம் ஒழிக" என்று கலைஞர் அவர்களோடு நானும் இன்னும் ஒரு நான்கைந்து பேரும் சேர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம். ஒரு மணி நேரம் கலைஞர் அவர்கள் கோஷம் போட்டுக் கொண்டு போனார், உடனடியாக காவல் துறையினர் வந்து, கலைஞர் அவர்களை கைது செய்கிறார்கள். எங்களையும், என்னையும் கைது செய்து, எங்கள் இருவரையும் ஜீப்பில் ஏற்றிக் கொண்டார்கள். மற்றவர்களை எல்லாம் வேனில் ஏற்றிக் கொண்டு டி.1 காவல் நிலையத்திற்கு கொண்டு போனார்கள்.

ஏழு ஆண்டு காலம் முதலமைச்சராக இருந்தவர், அவர் எப்பேற்பட்ட நெருக்கடிகளை எல்லாம் சந்தித்தார் என்பதை சொல்கிறேன், ஏழு வருடம் முதலமைச்சராக இருந்த கலைஞரை சேரில் கூட உட்கார வைக்கவில்லை. பெஞ்சில் உட்கார வைத்தார்கள். உயர் அதிகாரிகள் ஒவ்வொருவராக வந்தார்கள். தலைவர் பெஞ்சில் உட்

கார்ந்து இருக்கிறார். நான் பக்கத்தில் நிற்கிறேன். கலைஞர் அவர்களுடைய மகன் மு.க.அழகிரி கைது செய்யப்பட்டுவிட்டார். தமிழரசு கைது செய்யப்பட்டு விட்டார், செல்வம் கைது செய்யப்பட்டு விட்டார். அவர் வீட்டில் இருந்த செயல்மணியும் கைது செய்யப்பட்டுவிட்டார்.

மொத்த பேரையும் கொண்டுபோய் ஸ்டேஷனில் நிறுத்தி விட்டார்கள். அன்றைய தினம் அன்றைய நேரத்தில் கலைஞரின் வீட்டில் ஒரு ஆண் கூட கிடையாது. மாறனும் தளபதியும் மிசாவில் ஏற்கனவே கைது செய்திருக்கிறார்கள். வீட்டில் இருக்கின்ற மொத்த ஆண்களையும் கைது செய்து விட்டார்கள். அப்போது கலைஞர் சிரித்துக் கொண்டே, "எங்கள் வீட்டில் இருக்கின்ற ஆண் பிள்ளைகள் எல்லாம் கைது செய்துவிட்டார்கள். பெண்கள் மட்டும் தான் இருக்கிறார்கள்" என்று கூறினார். அப்போது கூட அவர் வருத்தப்படவில்லை. ஒவ்வொரு அதிகாரியாக வந்தார்கள். கமிஷ்னர் வந்தார், டி.சி. வந்தார், அவர்கள் பெயர் எல்லாம் தெரியும் அவர்கள் பெயரை சொல்லவிரும்பவில்லை. காரணம் இறந்து விட்டார்கள். ஒருவர் கூட கலைஞரை திரும்பி கூட பார்க்கவில்லை. அப்போது கலைஞர் ஒவ்வொரு பெயரா கச் சொல்லி, "இது வரைக்கும் இந்தப் பதவியில் ஒரு பிராமிணர் தான் இருந்தார். நம்ம ஆளை உட்கார வைக்க வேண்டும் என்று இவரை போட்டேன் திரும்பி பார்க்காமல் போறார் பார்" என்று கூறினார். அதற்குப் பிறகு இன்னொரு அதிகாரி வந்தார். அருடைய வரலாற்றை சொன்னார். இன்னொருவர் வந்தார் இந்த காஞ்சிபுரத்தோடு தொடர்பு உடையவர். அண்ணா அவர்களுக்கு செக்யூரிட்டி ஆபிசராக இருந்த ராமானுஜம் . அண்ணா முதலமைச்சர் ஆன உடனே ராமானுஜம் என்பவர் அண்ணாவுக்கு செக்யூரிட்டியாக இருந்தார். அவர் பதவி உயர்வு பெற்று கலைஞரால் ஐ.ஜி.ஆக்கப்பட்டார். ஒரு காலத்தில் அண்ணா வீட்டுக்குப் போகும் போது கார் கதவை திறந்து விட்டவர், ஐ.ஜி. ஆகி விட்டார். கலைஞர் கைது செய்யப்பட்டு பெஞ்சில் உட்கார வைக்கப்பட்டு இருக்கிறார். ஒரு சம்பிரதாயத்திற்குக் கூட திரும்பி வணக்கம் செய்யவில்லை. இவற்றையெல்லாம் கலைஞர் என்னிடத்தில் சொல்லிக் கொண்டிருந்தார்.

கலைஞருக்கு காபி கொடுத்த பெண் போலீஸ்!

ஒரு ஐந்து நிமிடத்திற்கெல்லாம் ஒரு 25 வயது மதிக்கத்தக்க ஒரு பெண்மணி காக்கி சட்டையோடு வந்து கலைஞர் அவர்களுக்கு கப் அன் சாசரில் காபி கொடுத்தார். கலைஞர் அந்தப் பெண்ணை ஏறெடுத்துப் பார்த்தார். "ஏன்ம்மா, காபி வாங்கி கொடுக்குறாயே நாளைக்கு உன் வேலைக்கு ஆபத்து வந்துவிட்டால் என்னமா செய்வது?" என்றார். அப்போது அந்தப் பெண்மணி என்ன சொன்னார் தெரியுமா?

இந்த காக்கி சட்டை, நீங்கள் கொடுத்த காக்கி சட்டை, உங்களுக்கு கொடுப்பதினால் இந்த வேலை போகுறது என்றால் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை என்று கலைஞர் அவர்களிடத்தில் கூறினார்.

அப்போது தான் கலைஞர் அவர்கள், "இந்தப் பொண்ணு யார் என்றே எனக்குத் தெரியாது, எவர் எவர்களுக்கெல்லாம் நான் பார்த்து பார்த்து பதவி கொடுத்தேனோ அவர்கள் எல்லாம் கண்டுக்காமல் போகிறார்கள். ஆனால் இந்தப் பெண்மணி யார் என்றே எனக்குத் தெரியாது" என்றார் .

அதற்பிறகு அந்தப் பெண், வரலாற்றை சொன்னார். முதன் முதலாக சென்னையிலே கிரீம்ஸ் ரோட்டில் 25 பேர் கொண்டு போலீஸ் ஸ்டேசனை கலைஞர் ஆரம்பித்து வைத்தார். அந்த 25 பேரில் ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு சப் இன்ஸ்பெக்டர் 23 உமன் கான்ஸ்டேபிள்கள். அந்த 23 பேர்களில் இவரும் ஒருவர். கலைஞர் அவர்களை பார்த்ததில்லை, அவரோடு நேரடி தொடர்பும் கிடையாது கலைஞர் போட்ட உத்தரவால் பயன் பெற்றதை கலைஞர் ஆபத்தில் இருந்தபோது காப்பாற்றினார். அப்போது தான் கலைஞர், "இது தான்ய்யா பெண் உள்ளம்" என்று கூறினார். இப்போது புரிகிறதா தளபதி பெண்களுக்கு ஏன் முதலில் கொடுத்தார் என்று.

எடப்பாடி என்னைப் பற்றி பேசினார்!

எடப்படாடி இருக்கிறாரே கல் நெஞ்சம் படைத்த எடப்பாடி. நன்றி என்ற வார்த்தைக்கே பொருள் புரியாத ஒருவர். அவர் இன்றைக்கு நடமாடிக்கொண்டு இருக்கிறார் என்றால் அதற்கு காரணம் யார்? திருநெல்வேலியில் எடப்பாடி பேசினார். எனக்கு வயது ஆகி விட்டது என்று . அதனை நான் சுந்தர்க்கு போட்டு காட்டினேன். எனக்கு வயது ஆகி விட்டது என்பதை நான் மறுக்கவில்லையே.

நான் 63 வருடம் இந்தக் கட்சியில் இருக்கிறேன் என்றால் என் வயது என்ன என்பது உங்களுக்கும் தெரியும். எடப்பாடி என்னைப்பற்றி பேசுகிறார். ஆர்.எஸ்.பாரதிக்கு வயதாகி விட்டது விஷத்தை கக்குகிறார். என் மையிண்ட் சேஞ்சு ஆகி போச்சாம். யார் மைண்ட் சேஞ்சு ஆகிப் போச்சு ? அதனால் தான் 50 வருட வரலாற்றை இங்கே தேதியோடு கூறினேன். எடப்பாடியால் இப்படி சொல்ல முடியுமா? வரலாறு இருந்தால் தானே சொல்வதற்கு.

எடப்பாடி எப்படிப்பட்டவர் என்பதை அ.தி.மு.க. காரர்களுக்கு தெரியும். அவரை முதலமைச்சராக ஆக்கியது சசிகலாதான். சசிகலா காலில் விழுந்து முதலமைச்சராக வந்தவர் தான் இன்றைய எடப்பாடி. அந்த எடப்பாடி சசுகலாவை கட்சியில் இருந்து நீக்கியது மட்டுமல்ல, எவ்வளவு கேவலமாக இப்போது பேசுகிறார். இன்னொருவர் இதனால் தான் அவருக்கு என் மீது கோபம். ஒரு நாற்பது ஐந்து வருடங்களுக்கு முன்பு அதாவது 1977, 1978 இல் இன்றைய முதலமைச்சர் எடப்பாடி சகோதர்கள் மூன்று பேரை கொலை செய்த வழக்கு சங்ககிரி கோர்ட்டில் நடக்கிறது. அப்போது அ.தி.மு.க. ஆட்சி நடக்கிறது. எடப்பாடி எப்பேற்பட்ட நன்றி கெட்டவர் என்பதை அ.தி.மு.க.வினர் புரிந்து கொள்ள வேண்டும். முதலமைச்சராக அவரை ஆக்கிய சசிகலாவை நீக்கிவிட்டார். அந்த வழக்கில் மட்டும் தண்டனை பெற்றிருந்தால் இன்றைக்கு ஆயுள் கைதியாக இருக்க வேண்டியவர் எடப்பாடி. செங்கோட்டையன் அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர். அவருடைய காலில் விழுந்த எடப்பாடி, அவரை கெஞ்சி கூத்தாடி வழக்கை முடித்துத்தரச் சொல்கிறார். இதனை இல்லை என்று மறுக்கட்டும். இங்கே வக்கீல்கள் எல்லாம் இருக்கிறார்கள். பல கிரிமினல் கேஸை நடத்தியவர்கள் எல்லாம் இருப்பார்கள். சென்ஸ் கோர்ட்டில் எடப்பாடி கேஸ் நடக்கிறது. எல்லா சாட்சிகளையும் அழைத்து செங்கோட்டையன் எடப்பாடிக்கு எதிராக நீங்கள் சாட்சி சொல்லக் கூடாது என்றார். இப்படி எல்லா சாட்சிகளையும் மாற்றியவர் எடப்பாடி.

அப்படி மாற்றிய காரணத்தினால்தான் எடப்பாடி விடுதலை செய்யப்பட்டார். சட்டம் தெரியுமா? கீழ் கோர்ட்டில் விடுதலை ஆகி விட்டால், உயர் நீதி மன்றத்திற்கு வழக்கை கொண்டு போக வேண்டும். அவர்கள் ஆட்சியில் போனார்களா? உச்சநீதிமன்றத்தில் இன்றைக்கும் வழக்கு போடுவதற்கு டைம் இருக்கு கொலை வழக்குக்கு லிமிடெட் பீரியடே கிடையாது என்பதை எடப்பாடி தெரிந்து கொள்ள வேண்டும். அந்த எடப்பாடி இன்றைக்கு செங்கோட்டையனை நீக்கி இருக்கிறார். அவரை நம்பி போகிறீர்களே அ.தி.மு.க. தோழர்களே, நாளைக்கு உங்களை காப்பாற்றுவது யார்?

முகமூடி அணிந்த எடப்பாடி!

அதுமட்டுமல்ல டெல்லிக்கு போய் அமித் ஷாவை பார்த்திருக்கிறார். ஒரு அமைச்சர் வீட்டுக்கு போவதாக இருந்தால் நேரடியாக போக வேண்டும். மூன்று கார் மாறி இன்னொரு காரில் ஏறி, அந்தக் காரில் முகத்தை மூடிக் கொண்டு, யார் முகத்தை மூடிக் கொண்டு போவார்கள். திருடன். மிகப் பெரிய அக்யூஸ்ட், உங்களுக்கெல்லாம் புரிகிற மாதிரி சொல்வதென்றால் அண்ணா யுனிவர்சிட்டியில் ஒரு பெண்ணை பாலியல் வன் கொடுமை செய்தான் இல்லையா ஒருவன், அவனும் இதே போல் தான் முகமூடி போட்டுக் கொண்டு போனான். கோர்ட்டுக்கு அவனை கொண்டு வரும் போதெல்லாம் முகமூடியை மூடிக் கொண்டு போனான்.

அப்போ எடப்பாடி கேட்டார் யார் அந்த 'சார்' என்று. பார்த்தீரா, தி.மு.க. எப்பேர்பட்ட கட்சி என்று. அன்றைக்கு ஒரு பாவமும் அறியாத எங்களைப் பார்த்து யார் அந்த 'சார்' என்று கேட்டாரே எடப்பாடி. இப்போது எடப்பாடி முகமூடி போட்டு போகிறார், எட்ப்பாடி பக்கத்தில் அமர்ந்து இருக்கன்ற 'சார்' யார் என்று இன்றைக்கு பத்திரிகையாளர்கள் எடப்பாடியை கேட்கிறார்கள். யார் அந்த 'சார்' என்று.

அவருக்கும், அமித்ஷாவுக்கும் எடப்பாடிக்கும் இருக்கின்ற ரகசிய ஒப்பந்தம் என்ன? நான் சொல்கிறேன், அ.தி.மு.க. தொண்டர்களே உங்கள் கட்சியை எடப்பாடி அடகு வைத்து விட்டார். உங்களுக்கு சீட் கொடுப்பது கூட இனி மேல் அமித்ஷாதான். கேண்டிடெட் லிஸ்ட் கூட அவரிடம் கொண்டு போய் காட்டி, அப்ரூவல் வாங்கி வரக்கூடிய சூழ்நிலை அ.தி.மு.க.விற்கு வரப்போகிறது.

இன்றைக்கு நான் காஞ்சிபுரத்தில் சொல்லி விட்டுப் போகிறேன். அதற்கான காரணம் என்ன வென்றால், எடப்பாடி சம்மந்தி மாட்டிக் கொண்டார். மகன் மாட்டிக் கொண்டார். இவர்களை எல்லாம் காப்பாற்றுவதற்காக இன்றைக்கு டெல்லிக்கு சென்று அடகு வைத்துவிட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பார்த்து எங்கள் தலைவரைப் பார்த்து நேற்றைக்கு தாறுமாறாக எடப்பாடி பேசுகிறார் என்றால், இனி மேல் தி.மு. தொண்டன் ரோட்டில் இறங்கினால் என்று வைத்துக் கொள்ளுங்கள் உங்களால் தாங்க முடியாது. நாங்கள் கொஞ்சம் பட்டும் படாமலும் போய்க் கிட்டு இருக்கிறோம். காரணம் இவர்கள் மீது எல்லாம் தினமும் ஒரு கேஸ் போட்டு உள்ளே அனுப்பி வைத்திருக்கலாமே என்று கேட்டோம். தலைவர் அவர்கள் என்ன சொன்னார் தெரியுமா, இதில் நமது கவனம் போனால் இந்த ஆட்சி செயல்பட முடியாது. மக்கள் என்ன பேசுவார்கள் தெரியுமா வந்த உடனே இதே வேளைதான். இவர்கள் வந்தால் அவர்களை உள்ளே தள்ளுகிறார்கள். அவர்கள் வந்தால் இவர்களை உள்ளே தள்ளுகிறார்கள் என்று மக்கள் அருவருப்பாக பேசுவார்கள் என்றார்.

குழந்தைகளைக் காக்கும் அன்புக்கரங்கள் திட்டம்!

எனவே நாம்முடைய சாதனைகளை எல்லாம் செய்ய வேண்டும் என்று ஒன்றின் பின் ஒன்றாக செய்தார். எல்லாவற்றுக்கும் மேலாக இங்கே காந்தி அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல அன்புக்கரங்கள் என்கின்ற ஒரு திட்டத்தை அண்ணா பிறந்த நாளில் அறிவித்தார். எப்படிப்பட்ட உண்ணதமான திட்டம் தெரியுமா? அதனை டி.வி.யில் பார்த்தபோது கல் நெஞ்சம் படைத்தவர்கள் கூடஅழுது விடுவார்கள். பாசமலர் படத்தை பார்க்கின்ற போது சிவாஜியும், சாவித்திரியும் கலங்குவதைப் பார்த்து அக்கா, தங்கையோடு பிறந்தவர்கள் எல்லாம் அழுவார்களே அதே போல அந்தப் படத்தை அந்தக் காட்சியை நான் பார்த்தபோது, எனக்கும் கிட்டத்தட்ட 80 வயது ஆகின்றது. ஆனால் என் கண்கள் குளமாக ஆகிவிட்டது. காரணம் அந்தக் குழந்தைகள் மேடையிலே நின்றுக் கொண்டிருக்கின்ற குழந்தைகளைப் பார்த்தால் பல பேர் பிள்ளை இல்லை என்று கோயில் கோயிலாக போகிறார்கள். ஆனால் இந்தக் குழந்தைகளுக்கு அப்பாவும் இல்லை, அம்மாவும் இல்லை அப்பா இல்லாவிட்டால் கூட அம்மா பத்து பாத்திரம் தேய்த்தாவது குழந்தைகளை எப்படியாவது கரையேற்றி விடுவார்கள். அப்பா , அம்மா இரண்டு பேரும் இல்லாத இந்தக் குழந்தைகள் அனாதையாக, ஒவ்வொரு குழந்தைகளும் முத்து மாதிரி இருக்கிறது. அந்தக் குழந்தைகள் ஏறத்தாழ கணக்கெடுத்து மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் என்று பதினெட்டு வயது வரை வழங்கப்படுகிறது.

கலைஞருக்கு ஆறடி இடம் கொடுக்காத எடப்பாடி!

நான் கேட்கிறேன் எடப்பாடியை, இந்தக் குழந்தைகள் படித்து வெளியே வருகிற போது என்னுடைய அப்பா பெயர் என்ன வென்று கேட்டால்.அந்தக் குழந்தைகள் இன்றைக்கு சத்தியமாக சொல்கிறேன் என்னுடைய அப்பாவாக இருந்தவர் மு.க.ஸ்டாலின் என்று தான் சொல்லுவார்கள். இப்படித்தான் பல சாதனைகளை செய்திருக்கிறோம். இப்படி செய்தால் தான் பிற்காலத்தில் உதவும் என்பதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் மறைந்த போது அவருக்கு ஒரு ஆறடி கடற்கரையில் கேட்ட போது எடப்பாடி கொடுக்க முடியாது என்று சொன்னார்.

கோபாலபுரத்தில் இருந்து தலைவர் தளபதி அவர்கள் எடப்பாடி வீட்டிற்குச் சென்று ஒரு ஆறடி இடத்தை கலைஞருக்காக மெரீனாவில் கேட்டார். காரணம் காலமெல்லாம் கலைஞர் அண்ணா அண்ணா என்று வாழ்ந்தவர். அண்ணா மறைந்த நேரத்தில் கலைஞர் கவிதை பாடினார். அண்ணா உன் இதயத்தை இரவலாகத் தாருங்கள் நான் அதனை பத்திரமாக கொண்டு வந்து உன் காலடியில் சேர்க்கிறேன் என்று சொன்னார். அந்தக் கவிதை பாடியது மட்டுமல்ல, தன் வாழ்நாள் முழுவதும், தான் மறைந்தால் அண்ணா சதுக்கத்திற்கு பக்கத்தில் தான் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்று கலைஞர் விரும்பினார். அதனை முதன் முதலில் என்னிடத்தில் தான் 1976 இல் எமர்ஜென்சி நேரத்தில் சொன்னார். எந்த நேரத்தில் அவர் சொன்னாரோ அவர் இடம் பெற்று வாங்கித் தருவதற்காக எடப்பாடி இடத்தில் தலைவர் குடும்பத்தோடு போய் கேட்டார். நானும் காந்தியும் மற்றவர்கள் எல்லாம் காவேரி மருத்துவமனையில் கண்ணீரோடு நின்று கொண்டிருக்கிறோம். மு.க. ஸ்டாலின் இறங்கி போகிறார். கூடவே கனிமொழி, அழகிரி, தமிழ் , செல்வி எல்லோரும் போகிறார்கள் எங்கே போகிறீர்கள் என்றுகேட்ட போது தலைவர் சொன்னார், எடப்பாடி இடத்திற்கு போகிறேன் கட்சி சார்பில் கேட்டால் கூட கொடுக்க மாட்டார். அப்பாவிற்காக பிள்ளைகள் போய் கேட்கிறோம் என்ற உரிமையோடு வீட்டிற்கு போய் கேட்கிறோம் என்று எடப்பாடி படி ஏறி, வீடுபோய் கேட்டு ஒருமணிநேரத்திற்கெல்லாம் திரும்புகிறார்.

குனிந்ததலையோடு வருகிறார் தலைவரிடத்தில் நான் தான் கேட்டேன் என்னவாயிற்று என்று. கொடுக்க முடியாது என்று மறுத்துவிட்டார். ஐந்து முறை முதலமைச்சராக இருந்து, 80 ஆண்டு காலம் இந்த நாட்டிற்காக உழைத்து எம்.ஜி.இராமச்சந்திரனாக இருந்தவரை, எம்.ஜி.ஆர். ஆக ஆக்கி, மக்கள் திலகமாக ஆக்கி, புரட்சி நடிகர் என்ற பட்டத்தையும் கொடுத்த தலைவர் நம் தலைவர் அவர்கள். அவருக்கு இந்த எடப்பாடி ஒரு ஆறடி இடம் கொடுக்க முடியாது என்று மறுத்தார்.

அந்த நேரத்தில் தான் நாங்கள் எல்லாம் பொங்கி எழுந்து தலைவர் தளபதி இடத்தில் சொன்னோம். அவர் கொடுக்காவிட்டால் என்ன நீதிமன்றத்திற்குச் செல்வோம், நிச்சயமாக இந்த இடத்தை பெற்றுத்தருவோம் என்று சொல்லிவிட்டு புறப்பட்டோம். நீதி பதி வீட்டிற்குச் சென்றோம். நல்லவராக அந்த நீதிபதி நம்மவர். நம்மவர் என்றால் பிற்படுத்தப்பட்டவர். இரவு பத்தரை மணிக்கு அவருடைய கதவைத் தட்டிய போது எங்களுடைய படபடப்பை பார்த்த போது அவர் சொன்னார்.ஏன் இவ்வளவு பதற்றத்தோடு வருகிறீர்கள். அவசரப்படாதீர்கள். நிச்சயமாக இந்த வழக்கை நான் விசாரிக்கிறேன். ஆனால் உங்களுக்கெல்லாம் தெரியும் ஒரு வழக்கை நான் விசாரிக்கிறேன் என்று சொன்னால் அந்த வழக்கு முதலில் நீதிமன்றத்தில் நம்பராக வேண்டும். அரசு வழக்கறிஞருக்கு நோட்டீஸ் வழங்க வேண்டும். இதனை முடித்து விட்டு வாருங்கள், இரவு 12, 1 மணியாக இருந்தாலும் சரி நான் வழக்கை விசாரிக்கிறேன் என்று உறுதிமொழி தந்தார் நீதிபதி.

அதனை கேட்டு உயர்நீதிமன்றத்திற்கு ஓடோடி போனோம், யார்